இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 352 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 16 – வெள்ளிக்கிழமை 01 ஆகஸ்ட் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 352 : Thiruvalluvar Year - 2056 - Aadi 16 - Friday 01 August 2025 - Dak 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 27 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 13.54 கோடி ரூபாய் செலவிலும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 60 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ஆகியவற்றை திறந்து வைத்து, 229.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. சீமா அகர்வால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 2025–26ஆம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக்கழகங்கள், தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம், Miranda House, University of Delhi போன்றவற்றில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல ஆணையர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாளை (ஆக.2–) சென்னையில் தொடங்கி வைக்கிறேன்! – மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்வீர்!

# “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்களில் - பொதுமக்கள் பங்கேற்றுப் பயன்பெறுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஆக.1-**

**ஆகஸ்ட் 2ஆம் நாள் தொடங்கும் “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்களில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவும் பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோள் வருமாறு:-**

2021ஆம் ஆண்டு நமது திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற உன்னதமான நோக்கத்தை நமது திட்டங்கள் வழியாகச் செயல்வடிவத்தில் கொண்டுவந்து, தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் முன்னேறிய மாநிலமாக உயர்த்திக் காட்டியிருக்கிறோம்.

அனைத்துத்துறைவளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்ற அடிப்படையில், ஒவ்வொரு மனிதரின் தேவைகள், கோரிக்கைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைச் செய்து தரும் வகையில், அனைத்துத் திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### மக்கள் நல்வாழ்வுத் துறையின் மருத்துவச் சேவைகள்!

அந்தவகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து, மருத்துவச் சேவைகளைக் கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று எண்ணத்தைச் செயல்வடிவமாக்க, பல்வேறு ஆய்வுக் கூட்டங்களுக்குப் பிறகு, ஒரு திட்டத்தை உருவாக்கினோம்.

அதனடிப்படையில், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 21.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், “உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்” என்று அறிவித்தார். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, எதிர்வரும் ஆகஸ்ட் 2ஆம் நாளன்று “நலம் காக்கும் ஸ்டாலின்” மருத்துவ முகாம்களை, சென்னை செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைக்க உள்ளேன்.

### 38 மாவட்டங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள்!

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள இந்தச் சிறப்பு



மருத்துவ முகாம்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 388 வட்டாரங்களில் 1164 முகாம்களும், ஒரு மண்டலத்திற்கு ஒருமுகாம் வீதம் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் வீதம் 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 3 முகாம்கள் வீதம் மக்கள் தொகை 10 இலட்சத்திற்குக் குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

### ஊரகப் பகுதிகளுக்கு முன்னுரிமை முகாம்கள்!

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம்வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட உள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூகபொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன. உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக்கல்வி துறை,

> **“அனைத்துப் பயனாளிகளுக்கும் கண், காது, மூக்கு (ம) தொண்டை மற்றும் பல் மருத்துவச் சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின்படி எக்ஸ்ரே (XRay), எக்கோகார்டியோகிராம் (Echocardiogram), அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் (USG) மற்றும் பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் (ம) மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட உள்ளன.”**

உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள 136

# ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வாழ்த்தினார்!

**சென்னை, ஆக.1-**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 2025-26 ஆம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மடிக்கணினிகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.7.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 2025-26 ஆம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக்கழகங்கள், தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம், Miranda House, University of Delhi போன்றவற்றில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

### பள்ளிகளின் கல்வித்தரம் மேம்படுத்தப்படுகிறது!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 98 ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிகளும், 36 பழங்குடியினர் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. சிறந்த உட்கட்டமைப்புடன், பள்ளிகளின் கல்வித்தரம் கடந்த நான்காண்டுகளாக மேம்படுத்தப்பட்டு வருகின்றது. சிறப்பான முன்னெடுப்புகள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களின் தேர்ச்சி விகிதம் முறையே 82%, 84.55% லிருந்து, 2025ஆம் ஆண்டில் 91.85%, 95.5% ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 10 சதவீதம் உயர்வாகும்.

மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவித்து JEE / CLAT /NIFT EE / CUET போன்ற தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெறச் செய்து உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதற்கு மாணவர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவீனங்களான கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம், நுழைவுத் தேர்வுகளுக்கு விண்ணப்ப கட்டணம் உள்ளிட்ட

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## அமெரிக்காவின் வரி விதிப்பு விவகாரத்தால் முடங்கியது நாடாளுமன்றம்

# அதானிக்கு உதவிட இந்தியப் பொருளாதாரத்தையே அழித்துவிட்டனர்!

### பிரதமர் மோடி – அமித்ஷா மீது ராகுல்காந்தி கடும் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக.1-*

அமெரிக்காவின் வரி விதிப்பு விவகாரத்தால் முடங்கியது. நாடாளுமன்றம். இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன. அமெரிக்கா வரி குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க சபாநாயகர் மறுப்புத் தெரிவித்தார். அதானிக்கு உதவிட இந்திய பொருளாதாரத்தையே, அழித்துவிட்டனர் என மோடி, அமித்ஷா மீது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடும் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அமெரிக்கா வரி விதிப்பு, பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரத்தில் நாடாளுமன்றம் நேற்றும் முடங்கியது. இரு அவைகளும்



அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை நேற்று கூடியதும் இந்தியா மீதான அமெரிக்காவின் 25 சதவிகித வரி விதிப்பு குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியது. இதேபோல், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி. ஆர்.பாலு வலியுறுத்தினார்.

ஆனால், விவாதம் நடத்த சபாநாயகர் மறுப்பு தெரிவித்தார். அவையை சுமூகமாக நடத்தவேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் இருப்பதாக எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டனர். எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்த சபாநாயகர் ஓம் பிர்லா, அவையை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினை எதிரொலித்தது. அமெரிக்காவின் வரி விதிப்பு, தேர்தல் ஆணையத்தின் ஒரு சார்பான நடவடிக்கை உள்ளிட்ட விவகாரங்கள் விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் சார்பில் 28 ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன. வாக்காளர் பட்டியல் நடவடிக்கை குறித்து விவாதிக்க மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா நோட்டீஸ் கொடுத்தார். எதிர்க்கட்சிகளின் ஒத்திவைப்பு தீர்மானங்களை நிராகரித்ததுடன், அவையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாகப் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, இந்தியாவின் தற்போதைய உண்மைநிலையை, அதிபர் ட்ரம்ப் கூறியிருப்பதாகவும், ஆனால் இந்திய பொருளாதார நிலை குறித்து பிரதமர் மோடி, மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா இருவருக்கும் தெரியாது என்றும் கூறினார். அதானிக்கு உதவிடவே, இந்தியாவின் பொருளாதாரத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒட்டுமொத்தமாக அழித்து விட்டதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.